219303

# இந்திய விவசாயம்

மலர் 1, இதழ் 3, 4

ஜனவரி பிப்ரவரி
1921

JL
m2, N21 IV
N21.1.3.4
219303

இந்திய உபசாரம்

மலர் 1 இதழ் 3, 4

ஜூன், ஜுலை 1921

JL
M2, N21 1V
N21.1.3,4

Registered No. M-1512.

# இந்திய விவசாயம்.

# INDIAN AGRICULTURE

ஓர் மாதாந்தர தமிழ் விவசாயப் பத்திரிகை

மலர்—1 } ஜனவரி & பிப்ரவரி **1921** } இதழ்கள்—3, 4

## பொருளடக்கம்.

பக்கம்


| | |
|---|---|
| கால்நடைகளின் விஷப் பூண்டுகள் ... ... ... | 35 |
| இந்திய விவசாய நிலைமை ... ... ... | 38 |
| ரசாயன எரு ... ... ... ... | 40 |
| நெற்பயிர் ... ... ... ... | 41 |
| உரங்களும் நிலவளங்களும் ... ... ... | 42 |
| ஒற்றுமைபாமை ... ... ... | 45 |


(பப்ளிஸிடி பிரோவிலிருந்து)

கால்நடை மூத்திரத்தை எருவாயுபயோகிக்கும் விதம்

கம்போடியா பருத்தி

MADRAS :

SOUTH INDIAN PRESS,

82, Armenian Street.

1921


| | | |
|---|---|---|
| வருட சந்தா தபாற்கூலி உள்பட | சாதாரணப் பதிப்பு | ரூ. 1-4-0 |
| | க்லேஸ் காகிதப் பதிப்பு | ,, 3-4-0 |


30 MAR 1921 MADRAS

# இந்திய விவசாயம்

## ஓர் மாதாந்தரத் தமிழ் விவசாயப் பத்திரிகை

பயிர்ச் செய்கை, பிருதிவி லட்சணம், தாவர சாஸ்திரம், மிருக பரிபாலனம், பயிர்களுக்கு கெடுதி யுண்டாக்கும் புழுப் பூச்சுகள், நோய் நொடிகள், ரசாயன சாஸ்திரம், தேனீ வளர்த்தல், பக்ஷி வளர்த்தல், பட்டுப்பூச்சி வளர்த்தல், கிருஷிகள் செய்யக்கூடிய சிறு தொழில்கள், கூட்டுறவு இவைகளைப்பற்றிய விஷயங்கள் தக்கவர்களால் எழுதப்பட்டு வரும்.

| | | |
|---|---|---|
| வருட சந்தா | சாதாரண பதிப்பு | ரூ. 1—4—0 |
| (தபாற்கூலி யுள்பட | உயர்தரப் பதிப்பு | ,, 3—4—0 |

(1) பிரதி இங்கிலீஷ் மாதமும் கடைசியில் வெளி வருவது.

(2) ஒரு வருடத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(3) சந்தாத் தொகையை முன்னுடியே செலுத்தியாவது அல்லது வி. பி. யில் பணம் செலுத்தியாவது பெற்றுக் கொள்ள வேண்டும்.

குறிப்பு:— வி. பி. யில் அனுப்பப் படுபவைகள் யாவும் 'ரிஜிஸ்தர்' செய்தே அனுப்ப வேண்டியதாக இருப்பதால் அதற்காக அணா 2 பிரத்தியேகமாகச் செலுத்த வேண்டியதாகிறது. ஆதலால் சந்தாத் தொகையை மணியார்டர் மூலமாக அனுப்புவதால் தங்களுக்கு 2 அணா லாபமாவதைக் கவனிக்க.

(4) சந்தா நேயர்கள் கடிதம் எழுதுகையில் சந்தா நெம்பரைக் குறிப்பிட வேண்டியது.

(5) பத்திரிகை 1920-ம் வருஷம், நவம்பர் மாதம் முதல் தொடங்கிப் பிரசுரிக்கப்படுகிறது.

வருட மத்தியில் சேருகிறவர்களுக்கு முன் சஞ்சிகைகள் முடிய வரை அனுப்பப்படும்.

இதை மாதிரிப் பிரதியாகப் பெற்றவர்கள் நமது பத்திரிகை லாபத்தைக் கருதிப் பிரசுரிக்கப் படாமல் நமது தமிழ் நாட்டின் கிருஷிகரின் அபிவிருத்தியைக் கருதியே பிரசுரமாகி வருகின்றதென்பதை உணர்ந்து, பத்திரிகை அனுப்பவேண்டாமென எழுதி விடாது, தாங்களும் இதற்குச் சந்தாதாரராகச் சேர்ந்து, தமது நண்பர்களும் சேரும்படியாகச் செய்வார்களென எதிர் பார்க்கிறோம்.

விளம்பர விகிதங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

மானேஜர்,
'இந்திய விவசாயம்' ஆபீஸ்,
82, அரமனைக்காரத் தெரு, சென்னை.

219302

30 MAR 1921 MADRAS

"கொழுமீதிற் குடிகொண்ட குடிச் செல்வமே செல்வம்"


# இந்திய விவசாயம்.

# INDIAN AGRICULTURE

A Tamil Monthly Journal devoted to Agriculture, Gardening and allied subjects.

மலர்—1 } ஜனவரி & பிப்ரவரி 1921 } இதழ்கள்—3, 4


## PLANTS THAT ARE POISONOUS TO CATTLE


BY

ANANTANARAYANA RAO, G. M. V. C.,
*Lecturer, Veterinary College, Madra.*


### கால்நடைகளின் விஷப் பூண்டுகள்

**நாம்** வளர்க்கும் மிருகங்களிற் சில தாவர பக்ஷிணிகள். அதாவது புற்பூண்டுகளை ஆகாரமாகக் கொள்ளுபவைகள். இப்பூண்டுகளிற் சில விஷ மிக்கக் கூடியவை. டார்னெல் (Darnel) என்னும் புல் இந்தியாவில் இதுவரை காணாமலிருப்பது நமது அதிர்ஷ்ட வசமே. என்றாலும் சில பூண்டுகள் விஷ மிக்கக் கூடியவென நிதரிசனமாகத் தெரிய வருகிறது. சாதாரணமாய், சில பருவங்களில் அல்லது சில சந்தர்ப்பங்களில் இப்பூண்டுகளில் அதிகவளவு நஞ்சு அடங்கியிருக்கிறது. கால்நடைகள் தற்செயலாயும் செய்வினையாலும் விஷமிட்டுப் போகலாம். இத்துரோகச் செயல் தோலை விற்று மிகுந்த பணத்தைப் பெறுவதற்காமெனச் சொல்லலாம். இவ்வழக்கம் கண்டிக்கப்படவேண்டும். காலாணையும், பஞ்சாணையும், பூண்டு வகைகளுடன் சேர்க்கலாம். இவைகள் பூண்டுகளில் இழிவான வகுப்பைச் சேர்ந்து மாடுகளின் உயிருக்கே அபாயம் விளைவிக்கக் கூடியதாக விருக்கின்றன.

## 1. சோளம்

தானியத்திற்காகவும், தீவனத்திற்காகவும், சோளம் பயிர் செய்யப்படுகிறது. நன்றாய் வளர்ந்துள்ள பயிர் விஷமிக்கா. ஏனெனில் அதிலிருக்கும் நஞ்சு சுவல்பமே. மழையில்லாமல் குறுகிப்போயிருக்கும் பயிரில் ஸியாஞேஜினிடிக் குளுகோஸைட் (Cyanogenetic Glucoside) என்ற பதார்த்தம் இருக்கிறது. இதுவே பொங்கி ஹைட்ரோஸியானிக் (Hydrocyanic) அல்லது பிரஸ்ஸிக் ஆஸிட் (Prussic acid) என்ற உப்பாகவும் வேறு சில பொருள்களாகவும் உண்டாகிறது. இந்த நஞ்சே மக்காச் சோளம், ஜாவா அவரை முதலிய வகைகளிலும், பின்னும் அவரை யினத்தைச் சேர்ந்த அல்லது பருப்பு வகைகளைச் சேர்ந்த செடிகளிலும் காணப்படுகின்றது. இளஞ் செடிகளினும் முதிர்ந்த செடிகளில்தான் இவ்விஷம் உள்ளது.

தோற்றம்:—விஷம் அதிகப்பட்டிருந்தால் யாதொரு குறியும் நமக்குப் புலப்படாமல் மாடு உடனே இறந்துவிடும். அளவு குறைந்திருந்தால் சோர்வு உமிழ்நீர் தள்ளல், மயக்கம் அன்றேல் இழுப்பு, கழிச்சல், திமிர் வாதம் இவைகளைக் காணலாம். மூச்சு விடமாட்டாமல் மாடு இறந்துவிடுகிறது. மூச்சு நின்றுவிட்டபோதிலும் இருதயம் கொஞ்சநேரம் வரை துடித்துக் கொண்டிருக்கும்.

சிகிச்சை—ஒன்றும் பயன் தராது. கிளர்ச்சி யுண்டாக்கும் பொருட்டு கொஞ்சம் சாராயம் கொடுக்கலாம். உடம்பிற் சூடு உண்டாக்கவும் மூச்சுவிடச் செய்யுமாறும் பிரயத்தனப்படவேண்டும். சிலர் அயர்ன் ஸல்பேட்டும் (Ironsulphate) லிக்கர் பொட்டாஸ் (Liquor Potassae) கலப்பதால் நேரும் பெர்ரஸ் ஹைட்ரேட் (Ferrus Hydrate) என்பதை அதிக அளவில் கொடுக்கவேண்டும் என்கின்றனர்.

## 2. Coculus Indicas.

Syn. Sevant Nut. Tam. (பேன் கொட்டை)

சாதத்தில் கலந்து காக்கைகளையும் இன்னும் இதர பறவைகளையும் கொல்வதற்கா இக்கொட்டை அடிக்கடி உபயோகப்படுத்தப்படுகிறது. மீன்களைக் கொல்லவும் அல்லது மயக்கமடையச் செய்யவும் சில சமயங்களில் கையாடப்படுகின்றது. பிக்ரோடாக்ஸ் (Picrotox) என்னும் முக்கிய நஞ்சுச் சத்து இதில் அடங்கியுள்ளது. அது கசப்பாகவும் போதையைத் தரக் கூடியதாகவுமுள்ளது. மாடுகளைத் தின்னவிட்டு அதனால் விஷமித்து இறக்கும்படி செய்வதுண்டு. இதை வைக்கோலிலாவது புல்லிலாவது வைத்து மாட்டுக்குக் கொடுத்துவிடுகிறார்கள்.

குறிகள்:—வாயில் நுரை தள்ளும்; உடல் நடுங்கும். மயக்கம் போடும் புத்தி கலங்கி மரணமடையும். சில சமயம் பேதியுங் காணுவதுண்டு.

சிகிச்சை:—பயன் தராது.

## 3 Lobelia Inflata.

Syn. Wild Tobacco Plant. Tam. (காட்டுப் புகையிலை)

மலைப் பிரதேசங்களில் காடுகளாக முளைத்திருக்கும். சில சமயம் தோட்டங்களில் பூச் செடியாக வளர்ப்பதுமுண்டு. இதில் லோபிலைன் (Lobline) என்ற க்ஷாரசத்து உள்ளது. அது விஷமிக்கும் குணமுள்ளது.



மாயும், சிறிதாயும் பழ வர்க்கங்கள் காலத்தில் முதிராமலும் ருசியற்று மிருப்பதும், கோதுமை முதலிய தான்யங்கள் பூராவும் முதிராமலும் நெல் முதலியவைகள் மணி பிடியாமல் பதராய்ப் போவதும் வேண்டிய உரம் இல்லாததால் தான். ஒரு பூமியில் செய்யும் பயிர் ஜாஸ்தியாய் வளர்ந்து அதற்குத் தகுந்த தான்யம் கிடைக்காவிட்டால் அந்தப் பூமிக்கு விசேஷ நைட்ரஜன் இல்லாமலும் விசேஷ பாஸ்பாரிக் ஆஸிட், பொட்டாஷ் உள்ள சரக்குகளைச் சேர்த்து பூரா உரம் தயாரித்துக் கொடுக்க வேண்டும். பயிரின் தாள் உரப்பில்லாமல் ஸ்வல்பகாற்றில் கூட கீழே விழும்படி அவ்வளவு துர்பல ஸ்திதியிலிருந்தால் அதற்கு விசேஷ நைட்ரஜன் பொட்டாஷ் சத்துள்ள உரங்களைச் சேர்க்க வேண்டும்.

ஒவ்வொரு பயிருக்கும் வெவ்வேறு அளவு பயிருணவு சத்துள்ள பூரா உரங்கள் வேண்டும். அதாவது, தான்யப் பயிர்கள் முக்கியமாய் தான்யத்தை உத்தேசித்து பயிரிடப்படுகின்றன. இப்பயிர் ஒவ்வொரு சாகுபடியிலும் 100-ல் 60 பங்கு பாஸ்பரிக் ஆஸிட்டை கிரகித்துக் கொள்ளுகிறது. ஆகையால், சாகுபடிதோறும் இந்த சத்துள்ள உரத்தை ஏராளமாய்க் கொடுக்க வேண்டும். தட்டை, வைக்கோல், புல் முதலிய பயிரில் இவைகளும் மாடுகளின் தீனிக்காக உபயோகமாவதால் இப்பயிருக்கு விசேஷ நைட்ரஜன் வேண்டும். மேற்கண்ட சத்து விசேஷமாய் பூமியிலிருந்து எடுபடுவதால் பூமியை வளமாய் வைத்துக்கொள்ள மேற்கண்ட சத்துக்கள் உரங்களை அடிக்கடி போடவேண்டும், பூமியின் வளம் குறைவுபடாமலிருக்கும் பொருட்டு அடிக்கடி மாற்றுப் பயிர் செய்ய வேண்டும். அதாவது, ஒவ்வொரு நெல் சாகுபடிக்கு மத்தியில் காய் தான்யப் பயிரை விதைத்து பச்சையாய் உழுதுவிட வேண்டும். பூமியின் புளிப்புத் தன்மையைப் போக்கி சுண்ணாம்பு உண்டாக்க வேண்டியளவு சுண்ணாம்பைச் சேர்க்க வேண்டும். மணற்பாங்கான பூமிகளில் அநேகமாய் நைட்ரஜன், பாஸ்பாரிக் ஆஸிட் பொட்டாஷ் இம்மூன்று சத்துக்களும் இராது. களி பூமிகளை சோதனை செய்து பார்க்கும் பக்ஷத்தில் சில சத்துக்கள் ஸ்வல்ப அளவு இருப்பதாகத் தெரிகிறது. இவைகள் பயிருக்கு உடனே உணவாகக்கூடிய நிலைமையிலில்லை. ஆனதால் இந்த பூமியில் செய்யவும் சாகுபடியிலிருந்து தக்க பலன் கிடைப்பதற்கு உடனே உணவாகக்கூடிய சத்துக்களடங்கிய உரங்களை உபயோகிக்க வேண்டும், மக்கின இந்திரிய வஸ்து விசேஷமாயுள்ள பூமியில் நைட்ரஜன் இருப்பதால் இதற்கு அந்த சத்தைவிட விசேஷ பாஸ்பாரிக் ஆஸிட், பொட்டாஷ் சத்தைச் சேர்க்க வேண்டும்.

ஒரு வியாபாரத்துக்கு தொழிற்சாலை ஏற்படுத்தி வேலை நடத்துவதில் அத்தொழிலை விரிவாய்ச் செய்வதிலும் ஒடுக்கிச் செய்வதிலும் சில செலவுகள் ஒன்றே. இப்பேர்ப்பட்ட செலவுகள் தொழிற்சாலையின் வாடகை மேல் பார்க்கும் செலவு முதலுக்கு வட்டி, வரி, பழுது பார்ப்பது முதலியவைகள். வியாபாரத்தை ஒடுக்கிச் செய்வதால் இந்தச் செலவுகளின் நூற்றுக்கு வரும் ஈவு ரொம்ப அதிகப்படும். இதே வியாபாரத்தை ஸ்வல்ப விரிவாய்ச் செய்வதால் மேற்கண்ட செலவுகள் ஒன்றுதான். ஆனால் வருமானம் அதிகப்படும். அதனால் செலவுகள் நூற்றுக்கு வரும் ஈவு கம்மிப்படும் வியவசாயத்திலும் இதேமாதிரி தான். நாலு ஏக்கர் நிலத்தை பண்ணை சாகுபடி செய்வதிலும் ஆறு ஏக்கரை சாகுபடி செய்வதிலும் மேஸ்திரி, பண்ணை ஆள், ஏர், மாடு முதலியவைகள் ஒன்றேதான் தேவை. ஆனால் 4 ஏக்கரை சாகுபடி செய்வதைவிட 6 ஏக்கரை சாகுபடி செய்வதில் வருமானம் அதிகப்படும். 4 ஏக்கர் சாகுபடி செய்ய என்ன செலவு பிடிக்குமோ அதே செலவில் 6 ஏக்கரை சாகுபடி செய்யும் பக்ஷத்தில் 4 ஏக்கர் சாகுபடியில் ஏக்கர் ஒன்றுக்கு என்ன செலவு ஆகுமோ அதைவிட 6 ஏக்கர் சாகுபடியில் ஏக்கர் ஒன்றுக்கு செலவு கம்மிப்படும் என்பதில் சந்தேகமில்லை. சில வியாபாரிகள் மேல் பார்ப்பவனுடைய சாமர்த்தியத்தால் வியாபாரச் சரக்குகளை ஸ்வல்ப விலையில் செய்யலாமென்று நினைக்கிறார்கள். இதேமாதிரி வியவசாயத்தில் தன் சாமர்த்தியத்தால் பூமியை வளப்படுத்தி காலம் தப்பாமல் தக்கபடி

சாகுபடி செய்தால் நல்ல பலன் கிடைக்கிறது. இருந்தாலும் விவசாயத்தில் வியாபாரத்தைப்போல் அல்லாமல் சரியான உரம் வாங்கி அதை முறையோடு உபயோகித்து தக்க விதையைப் போட்டு காலத்தோடு சாகுபடி செய்தால் மட்டும் தான் நல்ல பலன் கிடைக்கும். பூமியும் வளம் குறையாமலிருக்கும்.

உரம் வாங்கும்போது கவனிக்கவேண்டிய விஷயங்கள் இரண்டு. முதலாவது, ஒரு பூமியில் மேல்கண்ட சத்துக்களுக்குள் ஏதாவது ஒன்று அல்லது இரண்டு ஸ்வபாவத்திலேயே ஸ்வல்ப அளவு இருக்கின்றன. இரண்டாவது, ஒவ்வொரு பூமிக்கும் ஒவ்வொருவித சத்து தேவையாயிருக்கும். அதாவது, அந்த பூமிக்கு அந்த சத்துச் சேர்க்கப்பட்டாலொழிய அதில் பயிர் நன்றாய் வளராது, ஒரு பூமிக்கு எந்த சத்து முக்கியமாய்த் தேவையோ அதையும் அதில் செய்யப்போகும் பயிருக்கு எந்தெந்த சத்துக்கள் எவ்வளவு தேவையோ அதையும் அனுசரித்து தக்க உரத்தைத் தயாரித்துப் போடவேண்டும் ஒரு குறிப்பிட்ட பூமியில் செய்யப்போகும் ஒரு பயிருக்கு ஒவ்வொரு பயிருணவு சத்தும் இவ்வளவு வேண்டுமென்று பயிரிடுவோனாலேயே கண்டுபிடிக்கக்கூடும். அதாவது, தன் பூமிக்கு எந்தப் பூரா உரம் பிடிக்குமென்று அவனுக்குத் தோணுகிறதோ அதைப் போட்டு பயிரிட்டு அந்தக் கழனியில் ஸ்வல்ப பாகம் உரம் போடாமல் அதே பயிரை சாகுபடி செய்ய வேண்டும். இவைகளின் வித்தியாசத்தை விளை காலம் முழுமையும் பார்த்திருந்து அறுவடை காலத்தில் இவைகளிரண்டையும் தனித்தனியே அறுத்து கண்டு முதல் செய்து தான்யத்தின் வருமான வித்தியாசத்தைக் கண்டு பிடிப்பதுடன் தான்யத்தின் நய இளப்பத்தையும் கண்டுபிடிக்கவேண்டியது. இவைகளில் உரம் போட்ட பாகத்தில் ஏதாவது ஒரு குணம் இளப்பமாய்க் காணப்பட்டால் அந்த குணம் நயப்படுத்த எந்த சத்துத் தேவையோ அதை விசேஷமாய்ச் சேர்த்து உரம் தயாரித்து அடுத்த சாகுபடிக்குப் போட வேண்டும்.

பூமிகளில் நிர்வாகத்தை பழத் தோட்டம், பால் மாடு இவைகளின் நிர்வாகத்துக்கு ஒப்பிடலாம். அதாவது, சாதாரணமாய் பழ விருக்ஷங்களை வருஷா வருஷம் கவாத்து செய்து வந்தால் நல்ல பழத்தைக் கொடுக்குமென்பது எல்லாக் கனிவர்க்கத் தோட்டக்காரர்களுக்கும் தெரிந்த விஷயம். ஆனால், கவாத்து வாங்கினாலும் வாங்காவிட்டாலும் அது காய்த்துக்கொண்டுதான் வருகிறது. அதுபோல, கறவை மாடுக்கு சாதாரண வைக்கோல் தீனிமட்டும் போட்டாலும் அது கறந்துகொண்டுதான் வருகிறது. ஆனால், அதற்கு தட்டைப் பயிர், பருத்தி விதை வைத்தால் பால் விசேஷமாய்க் கொடுக்குமென்பது எல்லா இடையருக்கும் தெரிந்த விஷயம். அதேமாதிரி, விவசாயத்திலும் யாதொரு உரமும் போட்டிடாமல் பூமியில் நற்றை நட்டால் அதுவும் வளர்ந்து ஸ்வல்ப தானியத்தைக் கொடுக்கிறது. நயமான உரத்தை சரியானபடி உபயோகித்து சாகுபடி செய்வதால் பயிர் காலத்தோடு முதிர்ந்து நயமான தானியம் கிடைக்கும் என்பது எல்லா விவசாயிகளாலும் கண்டுபிடிக்கப்பட்ட விஷயம்.

லாபகரமான விவசாயத்துக்கு முக்கிய ஆதாரம் பூமியின் செழுமை. நயமான உரங்களை சரியானபடி உபயோகிப்பது யுக்தமாயும், வியாபாரத்தன்மையாயும், லாபகரமாயுமுள்ள சாகுபடிக்கு ஆதாரமென்பது சீமையிலுள்ள அநேகம் கிருஷிகரின் அநுபோகம். நிலங்களிலிருந்து நமக்கு வேண்டிய ஆகாரத்தை சம்பாதிப்பது சாத்தியமென்னும் பிரமாண்ட வித்தையானது எளிதில் உணவாகக்கூடிய பயிருணவு சத்துள்ள சரக்குகளின் அனுபோகத்தால்தான் சில மேல்நாட்டாருக்கு ஏற்பட்டது. இதற்கு அனுகுணமாய் பூர்வ ஜீவிய சரித்திரங்களும் சரியானபடி உணவாகும் நிலைமையிலுள்ள சத்துக்களடங்கிய உரங்களைக்கொண்டும் அடிக்கடி பூமியை வெட்டிக் கொத்தி பாடுபட்டும் விசேஷ தானியங்கள் எடுத்துக் கிருஷியில் லாபம் சம்பாதிக்கலாமென்று முறையிடுகின்றன.—

(*Scientific Manuring.*)



## NON-CO-OPERATION

BY

K. R. SANKAR, *Agricultural Inspector, Pudukottah State*

## ஒற்றுழையாமை

ஆத்தூர் கிராமத்துக் குடியானவன் ஒருவன் ஒருநாள் அதிகாலையில் எழுந்திருந்து தோளிலே ஒரு மண்வெட்டியைப் போட்டுக்கொண்டு தன் வயலைப் பார்க்கப் போனான், வயல் வாய்ப்பு வழியாய்ப் போகும்போது அங்கே அவன் ஆச்சரியப்படும்படியாய் கேலியும், விளையாட்டும், சங்கீதமும், ஆனந்தமுமான பேச்சுகளைப் பலர் பேசுவதுபோல் அவன் காதில் விழுந்தது. குடியானவன் சப்தம் அதிக சமீபத்தில் கேட்டபடியாலும் ஆனால் கிட்ட மனிதசஞ்சாரம் இல்லாமலிருப்பதையும் பார்த்து, மனதை தைரியப்படுத்திக்கொண்டு "யார் இப்படி சத்தம் போடுகிறது" என்று கேட்டான். "ஐயா! உங்களாலும் உங்களைச் சேர்ந்தவர்களாலும் செய்யப்பட்ட உபசரணையால் இங்கு ஆனந்தமாகக் காலம் கழிக்கிறோம் இன்று ஒரு சங்கம் (Conference) கூடுகிறது. சங்கத்தின் தலைவரை அழைப்பதற்காக இந்த சங்கீதம், ஆடல் பாடல்கள்" என்று ஒரு சத்தம் கேட்டது.

குடியானவன்:—இவ்வாறு பேசுவது யார் என்று தெரியவில்லை. ஒருவேளைக் கண்களுக்குத் தெரியாத தேவதைகளாயிருக்கும் என்று எண்ணி "ஓ! தேவதைகளே! எனக்கு ஒரு வரம் கொடுக்கவேண்டும். அதாவது, என் பயிர்ப் பச்சைகளில் நோவு நொடிகள் இனி விழாமலும் இப்போதிருக்கும் நோய் தணிந்துபோகவும் செய்யவேண்டுமென்று ஆகாயத்தைப் பார்த்துக் கும்பிட்டான். அதற்கு "குடியானவனே! நீ கேட்கும் வரத்தைக் கொடுத்து எங்கள் உயிரை மாய்த்துக்கொள்ளமாட்டோம். இருந்தாலும் பக்தியுடன் கேட்பதால் இன்று நடைபெறும் சங்கத்தில் நிகழ்கின்றவற்றைக் கேட்க வரம் தருகிறோம். பிறகு உம்முடைய யுக்தம்போல் செய்யலாம்" என்று பதில் கிடைத்தது. உடனே சரியென்று கிருஷிகன் உட்கார்ந்துகொண்டான். பின்வருமாறு உபந்நியாசம் அவன் காதில் விழுந்தது.

நண்பர்களே! யானை, புலி, கரடி, சிம்மம் முதலிய மிருகங்களை அடக்குவதிலும் அவைகளின் ஜீவதசைகளைப்பற்றி அறிவதிலும் மனிதர்கள் தங்கள் புத்தியைச் செலுத்தியிருக்கிறார்களே யொழிய நம்போன்ற சிற்றுயிர்களிடத்தில் கவனம் செலுத்துவதில்லை. நம்மை வெகு அற்பமான ஜந்துக்களென்று எண்ணியிருக்கலாம். அல்லது நாம் பெரியவர்கள், ஆகையால், நம்மை விசாரிக்கக் கூடாதென்று மரியாதை பாராட்டியிருந்தாலும் இருக்கலாம். எவ்விதத்திலும் நம்மை அவர்கள் அறியாதவரைக்கும் நமக்கு நன்மைதான்.

குடியானவன்:— 'ஓ! தேவதைகளே! நீங்கள் எனக்குப் பிரத்தியக்ஷமாக வேண்டும்" என்று பிரார்த்தித்தான். உடனே 10, 15 வெட்டுக் கிளிகள், (Gras hoppers) பல சிறு வண்டுகள் (Beetles) விட்டில் பூச்சிகள் (Moths) அவன்பேரில் தாவி உட்கார்ந்தன. குடியானவன் "என் பயிரைக் கெடுக்கும் பாவிகளே! என்று அவைகளை உதறித் தள்ளவும் அவைகள் மறுபடியும் பயிரில் தாவின. வயலில் இறங்கி அவன் விரட்ட அவைகள் அவனுக்கு முன்னும் பின்னும் தாவி, அவனைக் களைக்கச் செய்தன. அநேகம் பூச்சிகளை விரட்டி அடுத்த வயலுக்குப் போகச்செய்த பிறகு குடியானவன் "சரி, நாடியான் வயலுக்கு விரட்டிவிட்டேன் இனி பயமில்லை; இருந்தாலும், களைப்பாக இருக்கிறது" என்று [illegible] உட்கார்ந்தான். [illegible] வெட்டு, குத்து என்ற பேச்சுகள் கிளம்பின. சில [illegible]க்கெல்லாம் நிச்சயமாயிருக்கிறது கோபம் பொல்லாதது, அதை அடக்குவீர்; சிறியோர் செய்த பிழைகளையெல்லாம் பெரியோராயிற் பொறுப்

பதி உடனே, என்ற வாக்கியத்தை மனதிற்குக் கொண்டு வாருங்கள். ஆகையால், குடியானவனை மன்னிப்போம். மேலும் அவன் உலகத்திற்கு அன்னதாதா அல்லவா? இவனுக்கு நீங்கள் பயப்படவேண்டியதில்லை, நம்முடைய ஜீவதசையை இவன் அறியான்" என்று சங்கத்தின் தலைவராகிய ஒரு வெட்டுக்கிளி சொன்னது. இதைக் கேட்டுக் கொண்டிருந்த சபையாரில் கரிவண்டன் எழுந்திருந்து "நமக்கு மனிதர்களால் துன்பம் நேராதா? நம்மை இப்போது விரட்டினானே" என்றது.

வெட்டுக்கிளி, (Rice grasshopper) :—அடுத்த வயலுக்கு விரட்டினால் என்ன? பின்னால் நாம் இருந்த இடத்திற்குப் போக முடியாதா? இவன் வயலில் சதா உட்கார்ந்து கொண்டு விரட்டப் போகிறானா? அது இல்லை, ஒருவேளை பூச்சி சாஸ்திரியின் பத்திரிகையாவது அவருடைய ஆளாவது இங்கு வருமானால் நம்முடைய குட்டு வெளிப்பட்டுப் போம்.

இதைக் கேட்ட சிறு வெட்டுக்கிளி:— "அண்ணா! எனக்குப் பயமாயிருக்கிறது. நம்முடைய ரகசியம் யாது? அது எவ்வாறு ஜனங்கள் அறிவார்கள்? அவர்கள் அறிந்தாலும் நாம் சுகமாயிருக்க முடியாதா?" என்று கேட்டது.

பெரிய வெட்டுக்கிளி:—"தம்பீ! பயம் வேண்டாம் என்று அப்பவே சொன்னேனே? பத்திரிகை வந்து ரகசியம் வெளிப்பட்டால் என்ன? அநேகருக்குப் படிக்கத் தெரியாது. படிக்கத் தெரிந்தவர்களில் பலருக்கு அதில் சொல்லியிருப்பதில் நம்பிக்கை இருக்காது. ஆகையினால் சொல்லியிருக்கிறபடி நடக்கிறவர்கள் ரொம்ப சொற்பம். நம்மை அடித்துத் துரத்துவதற்கு எடுக்கும் இவர்களின் சிரமம் அயலாரின் ஒத்தாசையில்லாமையால் வீணாகும். ஆகையினால் நீங்கள் பயப்படவேண்டாம்.

சிறு வெட்டுக்கிளி:— தாங்கள் சொல்லுவது விளங்கவில்லை; ரகஸ்யம் என்று சொன்னீர்களே அது என்ன?

பெரிய வெட்டுக்கிளி!—பயத்தினால் உனக்கு மனதில் படவில்லை; ரகஸ்யமாவது இது. கவனமாய்க் கேளுங்கள். நாம் சுமார் ஆறுமாதம் முட்டை வடிவமாயிருந்தோம். ஆனி, ஆடியில் மழை விழுந்து புல் முளைக்கவும் முட்டையினின்று சிறு தத்துப் பூச்சி (hopper) யாக வெளிக் கிளம்பினோம். முதலில் வரப்பிலுள்ள புல்லைத் தின்றோம். 10, 15 நாளைக்கு ஒருதரம் சட்டை உரித்துப் பெரிதாக வளர்ந்தோம். இப்படி நாலுதரம் சட்டை உரிக்கவும் முதுகில் இரக்கை முளைக்க ஆரம்பித்தது. பிறகு இரண்டு தரம் சட்டை உரித்தபின் பெரிய வெட்டுக்கிளியானோம். ஆனால் நம்முடைய ஸ்திரீகள் எழுமுறை சட்டை உரித்தபின் பெரியவர்களாகிறார்கள். சிறு வயதில் தேகத்தின் நிறம் மண் நிறமாயிருக்கும்; பிறகு வயது ஆக ஆக அந்நிறம் மாறிப் பெரியவர்களாகும்போது பச்சை நிறத்தோடிருப்போம். ஸ்திரீகள் ஆண்களைக்காட்டிலும் உருவத்தில் பெரியவர்கள்; ஆதியில் புல்லைத் தின்றாலும் பின்னால் நெற்பயிர் இலைகளையே தின்போம்; கதிர் விடும் சமயத்தில் கதிர் மூடியிருக்கும்; இலையில் நமக்கு விசேஷ ப்ரீதி உண்டு; அதைக் கடித்து காலால் உதைக்கும்போது கதிர் சிலது உதிர்ந்துவிடுகிறது; அதற்கு நாம் என்ன செய்யலாம்.

சிறு வெட்டுக்கிளி:—நம்முடைய உயிர்நிலையைப்பற்றிச் சொல்லவில்லை; அதுவும் பூச்சிகளாகிய நம்மைக் கொல்ல என்ன யுக்தி செய்திருக்கிறார்கள் அதைச் சொல்ல வேண்டும்.

பெரிய வெட்டுக்கிளி:—நெற்பயிர் நட்டு எங்கும் பச்சைகொள்ளும் காலமாகிய அக்டோபர் மாதத்தில் ஆனி, ஆடியில் முட்டையிலிருந்து கிளம்பின தத்துக் கிளிகளில் ஆண்கள் 6 தரமும் பெண்கள் 7 தரமும் சட்டை உரித்துப் பெரியவைகளாகும், அந்த மாசம் முதல் டிஸம்பர் மாதம் வரையில் ஸந்தோஷமாகப் பயிரில் கூடி விளையாடுவோம். வரப்புகளில் பெண்கள் முட்டையிடும்; சாதாரணமாய் ஜனவரி மாசக் கடைசியில் நாம்



மாண்டுபோவோம். பிறகு ஆனி, ஆடியில் முட்டையினின்று தத்துக் கிளிகள் உண்டாகும். பிறகு வரப்புகளில் நாம் இருக்கும்போது, 4 அடி நீளமும் 2 அடி அகலமாயுமுள்ள சிறு துணிப்பை வலைகளைக் கொண்டு தத்துக் கிளிகளைப் பிடிக்கலாமென்றும், நெற்பயிரிலும் இறங்கி வலையால் பிடிக்கலாமென்றும், பூச்சி சாஸ்திரி சொல்லுகிறார். நல்லவேளை கதிர்விடும் சமயத்தில்தான் நம்மைக் கிருஷிகர்கள் அறிகிறார்கள்; அந்த சமயத்தில் வலையை இழுத்தால் கதிர்கள் ஒடிந்துபோமென்ற பயம் அவர்களுக்குத் தோன்றும். ஆகையால் வரப்புகளிலிருக்கும் காலத்திலும் இளம் பயிரிலிருக்கும் காலத்திலும் நம்மைப் பிடித்துக் கொல்லத்தகுந்த காலம். இந்த சூட்சுமம் ஜனங்களுக்குத் தெரியாது; அவர்கள் மிகவும் சாதுக்கள். இன்னும் அநேகம் பேர் பேசவேண்டியிருப்பதால் இத்துடன் நான் நிறுத்துகிறேன்.

தன் முதுகிலுள்ள முள்ளுகளைக் காட்டி சபையோரைப் பார்த்து Rice (hispa) கரிவண்டன் சொல்லலுற்றான்:—சிநேகிதர்களே! இப்போது நமது தலைவர் வெட்டுக்கிளியார் சொன்னதைக் கேட்டீர்கள், எங்கள் ஜீவகாலத்தைப்பற்றிச் சொல்லுகிறேன்; நாங்கள் உருவத்தில் பாதி உளுந்துக்கும் சிறியவர்களானாலும் கீர்த்தியிற் பெரியவர்கள். முதுகிலுள்ள முள்ளுகளினால் எங்களை எளிதில் தெரிந்துகொள்ளலாம். இலைகளிலே முட்டையிட்டு அதிலிருந்து குறும் புழுக்களான (Grub) குஞ்சுகளாகக் கிளம்பி இலையின் மேற்புறத்திற்கும் அடிப்புறத்திற்கும் நடுவே குடைந்து பச்சை பாகத்தைத் தின்று இலைகளை வெளுத்து வாடச் செய்வோம்.

இது வைக்கோல் நோய் என்றும் மோசாற்றால் உண்டானது என்றும் குடியானவர்கள் நம்புகிறார்கள். இவ்வாறு இலைகளைக் குடைந்து தின்று ஒரு வாரம் 10 நாள் கிரமித்து முள்ளுள்ள வண்டாக புழுக்களாயிருந்த நாங்கள் மாறி வெளியே வருகிறோம்; எங்களைச் சேர்ந்த லெப்டிஸ்பா (Leptispa) என்பவர் மயில் பச்சை நிறமுடையவர்; அவரும் எங்களைப்போலவே இலைப் பச்சையைத் தின்று இலைகளை வாடச் செய்வார்; அவர் ஒரு வயலில் தன் இனத்தார்களில் ஒரு ஆயிரம் பேருக்கு விருந்து அளிப்பதால் அவர் இன்று கூடிய சங்கத்திற்கு வரமுடியவில்லை என்று பிரசங்க மேடையினின்று கீழே இறங்கிற்று. அப்போது "ஜீவநிலை என்ன?" என்று ஒரு சத்தம் கேட்டது; அதற்குக் கரிவண்டு வலைகளைக் கொண்டு எங்களைப் பிடிக்கலாம். நாற்று நடும்பொழுது மேல் தோகையைக் கிள்ளிவிட்டு நட்டால் அந்நுனி இலைகளிலிருக்கும் முட்டைகளும் புழுக்களும் நாசமடையும் என்று சொல்லி உட்கார்ந்தது.

பிறகு பஞ்சள் நிறமுள்ள இரண்டு இரக்கையும் வெண்ணிறமான இரண்டு பின் றக்கையுமுள்ள ஒரு சிறு விட்டில் பூச்சி (Rice Stem Borer) தன் தொப்பியைக் கையில் பிடித்துக்கொண்டு பின்வருமாறு சொல்லிற்று "கனவான்களே! இதுகாறும் பேசினவர்கள் இலைகளைத் தின்று மேலாகப் பார்க்கும் தபஸ்விகள்; நாங்களோ நெற்பயிருக்கு ஆதாரமான குருத்தைத் தின்னும் ஞானிகள்; நாங்கள் நாற்றங்கால்களிலேயே வந்துவிடுவோம்; அப்போது வயலுக்குப் பத்துப் பன்னிரண்டுபேர்களிருப்போம். இதையறியாமல் நாங்கள் இருக்கும் பயிர்களையும் எடுத்து வழக்கம்போல் நடுவார்கள்; பிறகு சந்ததி விர்த்தியடையக் கேட்பானேன்; இலைகளில் முட்டையிடுவோம்; முட்டையிலிருந்து புழுக்கள் (Caterpillars) கிளம்பி நடுத்தண்டின் அடியில் குடைந்து குருத்தை அடையும். அங்கிருந்து மெதுவான தண்டின் பக்கத்தைத் தின்று வளரும்; அப்போது நடுத்தண்டு வெட்டுப்பட்டுப்போய் மேல்பாகம் வாடியிருக்கும். இதில் சூட்சுமம் என்னவென்றால் நாங்களிருப்பதை நெற்கதிர் விடும்போதுதான் பார்க்கிறார்கள்; முட்டையினின்று புழுவாகப் பிறந்து குருத்தைத் தின்று வளர்ந்த பிறகு நற்கதியடைய அன்ன ஆகாரமின்றி அசையாமல் அத்தண்டுக்குள்ளே ஒரு பட்டுக்குட்டை (Co-coon) பின்னி அதற்குள் நிஷ்டையிலிருப்போம்; கொஞ்சநாளைக்கெல்லாம் றக்கை முளைத்து முன் கடித்த

துவாரத்தின் வழியே வெளியே வந்து பறந்து உலாவுவோம்; நாற்றங்காலில் குருத்து வாடின பயிர்களைப் பிடுங்கி அழிப்பதாலும் இளம் பயிர் இலைகளிலுள்ள முட்டைகளைச் சேகரிப்பதாலும் கதிர் அறுத்த பிறகு அடித்தாளைப் பொறுக்கி எரிப்பதாலும் எங்கள் குலத்துக்கு நாசம் வரலாம். ஆனால் இந்த மர்மம் கிருஷிகனுக்குத் தெரியாது" என்று சொல்லிவிட்டுக் கீழே உட்காரும்பொழுது "உங்கள் பெயரென்ன?" என்று ஒரு சத்தம் கேட்க அதற்குத் தன்னை குருத்துப்பூச்சி யென்றும் வெண்கதிர்ப் பூச்சி யென்றும் சொல்வார்களென்றும் சொல்லி மஞ்சள் ரக்கையுள்ள விட்டில் பூச்சி (Moth) உட்கார்ந்தது

உடனே சாம்பல் நிற ரக்கையுள்ள விட்டில் பூச்சி (Rice case worm) ஒன்று பிரசங்க மேடையில் ஏறி "சகோதரர்களே! நண்பர்களே! நான் யதார்த்தவாதி; உள் ஒன்றும் வெளி ஒன்றும் சொல்லமாட்டேன். குருத்துப் பூச்சியார், வாலிபப் பருவத்தில் குருத்திலுள்ள அமிர்தத்தை பானம் செய்தேறாயும் ரக்கையுள்ள பூச்சியாக மாறும் வரை தண்டிற்குள் இருப்பதாகவும் சொன்னார். அவர் தன்னை ஞானி என்றும் சொல்லிக்கொண்டார். வாஸ்தவத்தில் அவர் மானியே தவிர ஞானி அல்ல. புழுவாகிய வாலிப திசையில் அவர்களுக்கு வஸ்திரங்கள் கிடைப்பதில்லை. நிர்வாணமாய் வெளியே வருவதற்கு அஞ்சி, பயிருக்குள்ளே இருக்கின்றார்கள்; பிறகு ரக்கை முதலியது உண்டாகி மேலெங்கும் சிறு கம்பளி ஆடை உடுத்திக்கொண்டு வெளிக் கிளம்புகிறார்கள். நாங்கள் இலைகளிலே முட்டையிடுவோம்; முட்டையிலிருந்து புழுக்கள் உண்டாகி இரண்டு மூன்று நாளையில் விபரம் தெரிந்ததும் நெற்பயிர் இலையை ஒரு அங்குலத்திற்குமேல் போகாமல் கிள்ளி வஸ்திரமாக, ஒவ்வொரு புழுவும் உடுத்திக்கொள்ளும். வஸ்திரம் கட்டியிருப்பதால் பகிரங்கமாக வெளியே தலையை நீட்டி இலைகளைத் தின்ன ஆரம்பிப்போம். அதில் சாரமான பச்சை பாகத்தையே தின்போம்; ஆனால் சங்கத் தலைவராகிய வெட்டுக்கிளியார் அவருடைய அனுபோகத்தின்படி இலை பூராவும் சத்துள்ளது என்று அபிப்பிராயப்படலாம்; அவரவர் அனுபோகம் அவரவர்களுக்கு; புழுக்களுக்கு 3 ஜதை கால்களுடன் 5 ஜதை பொய்க் கால்களும் உண்டு." இதற்குள் சபையிலிருந்து "காலைப்பற்றிய சங்கதி வேண்டாம், எப்படி பயிர்களில் வாழ்கிறீர். எப்படி தப்பித்துக்கொள்ளுகிறீர் என்பதைப் பற்றி சொல்லவேண்டும்" என்று ஒரு சத்தம் கேட்டது.

உடனே, சாம்பல் வர்ண விட்டில் பூச்சி:—சபையாருக்கு வந்தனம் செய்து "நண்பர்களே! நான் சொல்லுவதை தடை சொல்லாமல் கேட்க வேண்டுகிறேன். நான் முகமன் கூறமாட்டேன், பொய்யும் சொல்லேன். சிலபேர் எங்கள் குழந்தைகளுக்கு எட்டு ஜதை கால்களிருப்பதாக நினைக்கிறார்கள் அதற்காகத்தான் கால்களைப்பற்றிச் சொல்ல வந்தேன். நிஜமான கால்கள் ஆறு கால்கள்தான்; மற்ற ஐந்து ஜதை கால்களும் பொய்க் கால்கள். பறக்கும் பூச்சியாக மாறுவதற்கு முன், இக்கால்கள் மறைந்துபோகும். நாங்கள் இலைகளைத் தின்னும்போது இலைகள் வெளுமை நிறம் கொடுக்கும் அப்பொழுது ஜனங்கள் கொக்கு நோய் விழுந்தது என்றும் முறியன் விழுந்தது என்றும் சொல்லுவார்கள். முறியன் தெறிக்க மழை பெய்யுமென்று ஒரு வசனமும் சொல்லுவார்கள். வயலில் நிறைய தண்ணீர் கட்டி ஒரு நீண்ட கயிறு அல்லது மெல்லிய கொம்புகளைக் கொண்டு பயிரின்மேல் இழுத்தால் எங்கள் புழுக்கள் பயிர்களினின்று கீழே தண்ணீரில் உதிரும். உடனே தண்ணீரை வடியவிட்டால் அதில் அநேக புழுக்கள் வெளியே இழுக்கப்பட்டுப் போகும். தண்ணீரில் விழுந்தமாத்திரத்தில் சாகாது. ஏனெனில் புழுக்களுக்கு தண்ணீரில் மூச்சு விடும்படியாய், மீன்களுக்கு இருப்பதுபோல், சுவாசப்பைகளிருக்கின்றன. அதிகமாக பேசிவிட்டேன்; இன்னும் இரண்டொரு வார்த்தைகள் சொல்லி உட்காருகிறேன். அதாவது நாங்கள் விட்டில் பூச்சிகளானதால் பகற்காலத்தில் கண் அவ்வளவு ஸ்பஷ்டமாய்த் தெரியாது; எங்களுக்குக் காலை மாலைப்பொழுதிலும், இரவிலும்



கண் தெரிந்து சஞ்சாரம் அதிகமாக இருக்குமென்று சொல்லி முறியன் பூச்சி உட்கார்ந்தது.

அக்கிராசனாதிபதி:—காலதாமதமாய் விட்டதாலும் இன்னும் பேசவேண்டியவர்கள் அநேகர் இருப்பதாலும் அடுத்த திங்கட்கிழமை மாலை கூடவேண்டுமென்றும், இரண்டொரு தீர்மானங்கள் மட்டும் இப்பொழுது கொண்டுவந்தால் போதும் என்றும் சொன்னார்.

பிறகு கொட்டியன் பூச்சியார் (Swarming Caterpillar) எழுந்திருந்து வந்தனம் செய்யாமல் மளமள வென்று பேச ஆரம்பித்தது. "ஏ! சிற்றுயிர்களே! நாங்கள் நாற்றங்காலிலும் இளம் பயிரிலும் திடீரென்று ஆயிரக்கணக்காய்த் தோன்றி இலைகளைத் தின்று பயிர்களை நாசம் செய்வோம். திடீரென்று ஐந்தாறு நாளைக்கெல்லாம் மறைந்து போவோம். எங்களை பெருமாள் பூச்சியென்று ஜனங்கள் சொல்லுகிறார்கள்; சிலர் எங்களைத் தெய்வமாக நினைத்து எங்களை ஒன்றும் செய்வதில்லை; ஆகையால் நீங்களும் எங்களை வணங்கவேண்டும்" என்று சொல்லவே இவனை அடியுங்கள், வெளியே விரட்டுங்கள்; இவன் நமக்கு தெய்வமா? என்ன துணிச்சல் என்று சிலர் கூச்சல்கள் போட, சபையில் ஓர் குழப்பம் உண்டாயிற்று. உடனே அக்கிராசனாதிபதி கொட்டியன் பூச்சியைப் பார்த்து "ஆனைக் கொம்பனை (Annikomba) க் கூட அடுத்தநாள் பேசலாம் என்று சொல்லி கான்பரன்ஸ் தீர்மானங்களைக் கொண்டு வரவேண்டுமென்று நான் சொல்லுகையில், நீ பேசுவதற்கு முன்வந்ததென்ன துணிச்சல்? அதிருக்கட்டும்; சபையோருக்கு வந்தனம் பண்ணாமல் பிரசங்கித்தாய் போதாக் குறைக்கு உன்னை வணங்கவேண்டுமென்று கூறி இந்த சபையை அவமதித்தாய், உன் வசைச் சொல்லை வாபஸ் வாங்கிக் கொண்டு இப்போது மன்னிப்புக் கேட்காதபோனால் உன்னை இச்சங்கத்தை விட்டுத் துரத்துவேன்" என்று சொன்னார். மனிதர்களே நம்மை பெருமாள் பூச்சி யென்று அழைக்கும்போது இப் பூச்சிகள் நம்மை சுவாமி யென்று தலைமேல் தூக்கிக்கொண்டுபோவார்கள் என்று நினைத்துச் சென்னேன்; இன்று உயிருடன் வீட்டுக்குப் போகவேண்டுமானால் நூறு கும்பிடாவது போடவேண்டுமென்று தனக்குள் நிச்சயித்து அவ்வாறே சாஷ்டாங்கமாக கொட்டியன் பூச்சி நமஸ்காரம் பண்ண ஆரம்பித்தது. இருபது கும்பிடு ஆனதும் போதுமென்று சொன்னார்கள்; பிறகு கொட்டியன் பூச்சி ஒரு பெஞ்சியின் பக்கத்திலிருந்து மெதுவாக நழுவி ஒருவருக்கும் தெரியாமல் வீட்டுக்கு ஓடிப்போய்விட்டது; அப்போது சத்தமும் அடங்கியது.

பிறகு, மீசையை ஒரு கையினால் முறுக்கிக்கொண்டு, மற்றொரு கையில் ஒரு புஸ்தகத்தை எடுத்துக்கொண்டும் ஒரு வாலிப எலி பிரசங்க மேடையிலேறி சபையாருக்கு மிகுந்த தாழ்மையோடு வந்தனம் செய்தது. உடனே எல்லோரும் கரகோஷம் செய்தார்கள்; சத்தம் நின்றதும், எலி "சகோதரர்களே! நண்பர்களே! ஆதிகாலம் முதற்கொண்டு உங்களுடன் வயலிலே வாழ்ந்து, உங்களுடன் சுகதுக்கங்களை அனுபவித்து வரும் உங்களது அயல் வீட்டுக்காரனாகிய என்னை, இன்று இச்சங்கத்திற்கு வந்து முதல் பிரேரணையைக் கொண்டுவரும்படி ஆஞ்ஞாபித்தபோது, எனக்கு அளவிலா ஆனந்தம் உண்டானது.

ஆனால், அதற்குத் தகுந்த பிரதி உபகாரம் எவ்வாறு செய்யப்போகிறேன் என்ற துக்கம் பின்னால் வந்தது. எப்படி இருந்தபோதிலும் நண்பர்களுக்கிடையில் துக்கம் வருவதற்குக் காரணமில்லை என்ற துணிவுடன் இப்போது உங்கள் முன் நிற்கிறேன்; நெற்பயிர் நட்டு இரண்டு மூன்று மாதம் சிலசமயம் நாலைந்து மாதம் வரை கண்கொட்டாமல் பயிரை காவல் காக்கவேண்டியிருக்கிறது; பிறகு கதிர் முற்றவும் அதை அறுவடை செய்து எங்கள் களஞ்சியத்திற்கு கொண்டுபோய்ச் சேர்க்கிறோம்; சில மனிதர்கள் எங்கள் வீட்டை இடித்து எங்களை ஹிம்சிக்கின்றார்கள் இருந்தாலும். ஒவ்வொரு கிராமத்திலும் எங்களை ஆதரிக்கும் புண்ணியவான்கள் இல்லாமற் போகவில்லை; அவர்கள் தங்கள்

வரப்புகளை பெரிதாகவும் சப்பாத்தி முதலிய காட்டுச் செடிகளை முளைக்கவிட்டு மற்ற ஜனங்களை அங்கிருக்கும் எலி, வீடுகளை அழிக்காவண்ணம் காப்பாற்றி வருகின்றனர். ஸ்காட்லண்டு தேசத்தில் எலிச் சட்டம் ஒன்று ஏற்படுத்தி யிருக்கிறார்கள்; அதன்படி ஒருவன், நிலத்தில் எலி இருக்குமானால், அதை அவன் உடனே கொல்லவேண்டும்; இல்லாவிட்டால் அபராதம் விதிக்கப்படுவான். அம்மாதிரி சட்டம் இங்கே கிடையாது; நல்லவேளை, ஆனால் பூச்சிகளை பிடிக்கும்படி ஒரு சட்டம் ஏற்படுத்தி யிருப்பது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அதை யோசிப்பதற்கே இன்று கூடியிருக்கிறோம். காலதாமதமானதால் எலிகளைப்பற்றி எழுதிய இப்புஸ்தகத்தைப் படிக்க முடியவில்லை. அடுத்த சங்கத்திலாவது வாசிக்க இடம் கொடுக்கவேண்டும்" என்று சொல்லவும் சபையார் எல்லோரும் அப்படியே ஆகட்டும் என்று ஏகோபித்துச் சொன்னார்கள். பிறகு எலியார் சபையாரைப் பார்த்து "பூச்சி நோய் சட்டம் (Weeds and Pests Act) சர்க்காரில் ஏற்படுத்தி யிருப்பதில் முதல் முதலில் கம்போடியாப் பருத்தியில் விழும் 'செம்புழு' விஷயத்தில் அமுலுக்கு கொண்டுவரப்பட்டு 'செம்புழு' வம்சம் அநேகமாய் நிர்மூலமாய்ப் போயிருக்கிறது. இச்சட்டமானது நாளாவட்டத்தில் மற்றப் பூச்சிகள் விஷயத்திலும் பிரயோகப்படுத்தும்படியாய் வரும் என்று இக்கான்பான்சுக்குத் தோன்றுகிறபடியால் இந்தப் 'பூச்சி சட்டத்தை' சட்ட புஸ்தகத்திலிருந்து எடுத்துவிடும்படி சர்க்காரை இச்சங்கத்தார் வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறார்கள்" என்ற தீர்மானத்தை (எலியார்) வாசிக்க எல்லாரும் சரிசரி என்று ஒப்புக்கொண்டார்கள்.

பிறகு ஒரு வெட்டுக்கிளி எழுந்திருந்து இரண்டாவது தீர்மானத்தைப் படித்தது அதாவது பயிர்களில் விழும் பூச்சிகளின் ஜீவதசையைப்பற்றியும் அவைகளை நாசம் செய்யும் முறைகளைப்பற்றியும் பள்ளிக்கூடங்களில் பாடங்கள் ஏற்படுத்தக் கூடாது (b) இதைப்பற்றிய துண்டுப் பத்திரிகைகள் இனி பிரசுரம் செய்யக்கூடாது (c) ஏற்கனவே பிரசுரம் செய்யப்பட்ட பிரசுரங்களை சர்க்காரில் பறிமுதல் செய்து அழித்துவிடவேண்டும்." உடனே கரிவண்டன் எழுந்திருந்து ஏற்கெனவே பிரசுரம் செய்யப்பட்ட எல்லாப் பத்திரிகைகளையும் பறிமுதல் செய்து அழிப்பது முடியாத காரியமானதால் அந்த தீர்மானம் வேண்டாமென்று ஆட்சேபித்தது. பிறகு அந்தத் தீர்மானம் ஒப்புக்கொள்ளப்படவில்லை. பாக்கி நின்ற (a) தீர்மானமும் (b) தீர்மானமும் சபையாரால் ஒப்புக்கொள்ளப் பட்டது. பிறகு அக்கிராசனாதிபதி அவர்கள் எழுந்திருந்து கடவுள் வணக்கஞ் செய்து சபையாரைப் பார்த்து பின்வருமாறு சொன்னார்:—"என் பிரியமான சகோதரர்களே இன்று நமது வேண்டுகோளுக் கிணங்கி தன் சிரமத்தையும் வேலையையும் பாராட்டாமல், இன்று கான்பான்சுக்கு விஜயம் செய்த நமது நண்பர் எலியாருக்கு நாம் எல்லோரும் வந்தனம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். கொட்டியன் சம்பவத்தைத் தவிர இன்று சங்கமானது நன்று நடைபெற்றதென்றே சொல்லவேண்டும். அவர்! இனத்தார்கள். சில ஊர்களில், வயல்களிலிருக்கும்போது வாத்துகளை அக் கழனிகளில் கொட்டியன் புழுக்களை நாசம் செய்ய விடுகிறார்கள்.

இந்த சங்கதி அவனுக்குத் தெரியவில்லை. மேலும், பெருமான் என்று மனிதர்கள் அறியாமல் சொலவிவிட்டால் நம்மிடத்திலும் அந்த பெரியதனத்தை நிலைநிறுத்தப் பார்த்தானே; அவன் ஒரு பெரிய மூடன், அவன் சொன்னதை நாம் மறந்துவிடுவோம்; அக்கிராசனாதிபதிக்கென்று உயர்ந்த பீடம் ஏற்படுத்தினீர்கள்; அவ்வுயர்ந்த ஆசனத்திலிருந்து உங்கள் எல்லாரையும் பார்க்க வல்லேன். அத்துடன் என் மனமும் புத்தியும் சற்று விசாலமாகப் போகிறது; ஆகையால் ஒருவர் பேசும்போது அவரது எதிராளி என்ன சொல்வான் என்பதும் என் மனதில் படுகிறது; மனிதர்கள் பூச்சிகளைப்பற்றி படிக்கக் கூடாது என்றும் ச[illegible] ஏற்படுத்தக்கூடாது என்றும் எல்லோராலும் சொல்லப்பட்[illegible] அப்படியே நாம் [illegible]கிறபடி நடக்கிறதென்று வைத்துக்